# December 22, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. புதிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் ஏற்கெனவே இருந்த மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத்திட்டத்தை விட மேம்பட்டதாக இருக்கும்; புதிய திட்டத்துக்கு ரூ.1,51,282 கோடிக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று மத்திய ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

    i. மத்திய பாஜக கூட்டணி அரசின் புதிய திட்டமான 'வளர்ந்த பாரத ஊரக வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத் திட்ட (விபி-ஜி ராம் ஜி) மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர் சௌஹான் இவ்வாறு கூறினார்.

    ii. இதன்மூலம் கடந்த 2005-ஆம் ஆண்டு காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டு, 2009- இல் மகாத்மா காந்தி பெயர் சூட்டப்பட்ட இத்திட்டம் பெயர் மாற்றத்துடன் புதிய வடிவமும் பெற்றுள்ளது.

    iii. புதிய சட்டத்தின்படி தண்ணீர் பாதுகாப்பு (நீர் மேலாண்மை), ஊரக கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதாரம் சார்ந்த உள்கட்டமைப்பு உருவாக்கம், பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் ஆகிய 4 முக்கியப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

    iv. 125 நாள் வேலைத் திட்டத்துக்கான புதிய ஊதியத்தைமத்திய அரசு அறிவிக்கும் வரை, பழைய 100 நாள் திட்ட ஊதியமே நடைமுறையில் இருக்கும். இது வரை 100 நாள் வேலைத் திட்டத்துக்கான முழு நிதியையும் மத்திய அரசே வழங்கி வந்தது. ஆனால், புதிய திட்டத்தின்கீழ் நிதிப் பங்களிப்பை மாநில அரசுகளும் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

    v. வடகிழக்கு மற்றும் இமயமலைப் பகுதி மாநிலங்கள் 10 சதவீத நிதியும், மற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் 40 சதவீத நிதியும் வழங்க வேண்டும்.

    vi. புதிய நிபந்தனைகள்: புதிய'விபி-ஜி ராம் ஜி' சட்டம் நடைமுறைக்கு வந்த 6 மாதங்களுக்குள், சட்ட விதிகளுக்கு ஏற்ப மாநிலங்கள் தங்களின் புதிய வேலை உறுதியளிப்புத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

    vii. வேளாண் பணிகள் அதிகமாக இருக்கும் பருவங்களில் தொழிலாளர்களின் தட்டுப்பாட்டைத் தவிர்க்க, அந்த நேரத்தில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் பணிகள் வழங்கப்படக் கூடாது.

    viii. விண்ணப்பித்த 15 நாள்களுக்குள் வேலை வழங்கப்படாவிட்டால், மாநில அரசு உரிய நிவாரணத் தொகை வழங்க வேண்டும் உள்ளிட்ட நிபந்தனைகளும் புதிய சட்டத்தில் இடம் பெற்றுள்ளன.

2. ஐ.நா. அகதிகள் முகமையின் தலைவராக முன்னாள் இராக் அதிபர் பர்ஹாம் சாலி (65) பதவி வகிக்க ஐ.நா. பொதுச் சபை அண்மையில் ஒப்புதல் அளித்தது.

    i. இதன்மூலம், அந்த முகமைக்கு அகதியாக இருந்த ஒருவர் முதல் முறையாகத்

தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

ii. ஐ.நா.வின் முக்கிய முகமைகளில் ஒன்றாக விளங்கும் அகதிகள் முகமையின் தலைவராக வரும் ஜனவரி1-ஆம் தேதி முதல் 5 ஆண்டுகளுக்கு சாலி பதவி வகிப்பார்.

iii. ஐ.நா. பொதுச் செயலராகும் முன், அகதிகள் முகமைக்கு அன்டோனியோ குட்டெரெஸ் தலைமை வகித்தார். அவர் சாலியை அகதிகள் முகமையின் தலைவராகப் பரிந்துரைத்தார். இதையடுத்து 193 உறுப்பு நாடுகளைக் கொண்ட அந்த முகமையின் தலைவராக சாலி தேர்வு செய்யப்பட்டார்.

3. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் உத்தரவின்படி, வெனிசுலாவில் மற்றொரு எண்ணெய்க் கப்பலை அமெரிக்க கடலோரக் காவல் படை சிறைபிடித்துள்ளது.

i. வெனிசுலா உள்ளிட்ட தென் அமெரிக்க நாடுகளில் இருந்து அமெரிக்காவுக்கு போதைப் பொருள் கடத்தி வரப்படுவதாகக் குற்றஞ்சாட்டி வரும் அதிபர் டிரம்ப், 'போதைப் பொருள் பயங்கரவாதத்துக்கு எதிரான போர்' என்ற பெயரில் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ii. அதன் ஒரு பகுதியாக, போதைப் பொருள் கடத்தி வந்ததாக கரீபியன் கடல் மற்றும் கிழக்கு பசிபிக் கடல் பகுதியில் படகுகள் மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில், 100-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

iii. வெனிசுலா அதிபர் மடூரோவை 'போதைப் பொருள் பயங்கரவாதி' என்று டிரம்ப் அரசு அறிவித்துள்ளது. அவரைக் கைது செய்ய உதவு வோருக்கு 5 கோடி டாலர் (சுமார் ரூ.450 கோடி) சன்மானமும் அறிவிக் கப்பட்டுள்ளது.

iv. அத்துடன், கரீபியன் கடலில் வெனிசுலாவுக்கு அருகே மிகப் பெரிய அளவில் தனது கடற்படையை அமெரிக்கா குவித்தது. இதனால் வெனிசுலா மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியானது.

v. இந்நிலையில், வெனிசுலா கடலோரப் பகுதியில் எண்ணெய்க் கப்பல் ஒன்றை அமெரிக்க படை சிறைபிடித்தது. அதிபர் மடூரோ மீதான அழுத்தத்தை அதிபர் டிரம்ப் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், 2 வாரங்களில் வெனிசுலா கடலோரப் பகுதியில் 2-ஆவது எண்ணெய்க் கப்பல் சிறைபிடிக்கப்பட்டுள்ளது.

4. கலாசாரம், புவியியல், மத எல்லைகளைக் கடந்த உலகளாவிய நடைமுறை தியானம் என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகி ருஷ்ணன் தெரிவித்தார். மன அமைதிக்கும், சமூக நல்லிணக்கத்துக்கும் தியானம் இன்றியமையாதது என்றும் அவர் குறிப்பிட்டார்.

i. உலக தியான தினம் ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி, தெலங்கானாவில் உள்ள மாபெரும் தியானமையமான கன்ஹா சாந்தி வனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடியரசு துணைத் தலைவர் சி.பி.ரா தாகிருஷ்ணன் பங்கேற்றார்.

ii. அப்போது, டிச. 21-ஆம் தேதியை உலக தியான தினமாக அறிவிக்கும் ஐ.நா. பொதுச்சபை தீர்மானத்தில் இந்தியா ஆற்றிய முக்கியப் பங்கை நினைவுகூர்ந்து, அவர் பேசியதாவது: மன நலன் மற்றும் ஆன்மிக மேம்பாட்டில் தியானத்தின் வலிமைக்கான உலகளாவிய அங்கீகாரம் இது. தியானம், யோகா, ஆன்மிகம் போன்ற நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்ட இந்தியா, உலகுக்கு தொடர்ந்து ஞானத்தை நல்கி வருகிறது.

5. வங்கதேசத்தின் சிட்டகாங் நகரில் விசா விண்ணப்ப மையம் காலவரையின்றி மூடப்படுவதாக இந்தியா தெரிவித்தது.

i. வங்கதேசத்தில் கடந்த ஆண்டு முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான போராட்டத்தில் முக்கியப் பங்காற்றிய மாணவர் தலைவரான ஷரீஃப் உஸ்மான் ஹாதி (32) துப்பாக்கியால் சுடப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதனால் அங்கு கடந்த சில நாள்களாக மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. அடுத்த ஆண்டு பிப்ரவரி 12-ஆம் தேதி நடைபெறவுள்ள வங்கதேச பொதுத் தேர்தலில் ஹாதி போட்டியிட திட்டமிருந்தார்.

ii. இந்நிலையில், ஹாதியை சுட்டதாக கருதப்படும் ஃபைசல் கரீம் மசூத் மற்றும் ஆலம்கிர் ஷேக் ஆகிய இருவரும் சட்டவிரோதமாக எல்லை தாண்டி இந்தியாவுக்குத் தப்பி வந்துவிட்டதாக வங்கதேச ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, அந்நாட்டில் உள்ள சட்டோகிராம் தூகரகம் உள்பட இந்திய தூதரகங்கள் மீது தாக்குதல் நடத் தப்படுகின்றன.

6. சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தன்னார்வத் தொண்டு செயல் அல்ல; அது பெருநிறுவனங்களின் அரசமைப்புக் கடமையை நிறைவேற்றுவதாகும் என்று உச்சநீதிமன்றம் கூறியது.

i. ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களில் இயங்கிவரும் அனல் மின் நிலையங்கள் உள்ளிட்ட புதுப்பிக்க இயலாத எரிசக்தி மின் நிலையங்களின் செயல்பாடுகளால் அழிவின் விளிம்பில் உள்ள கானமயில் (கிரேட் இந்தியன் பஸ்டர்ட்) பறவை இனங்களுக்கு மிகப் பெரிய அச்சுறுத்தல் எழுந்துள்ளது. இதைத் தடுத்து அரிய பறவை இனங்களைப் பாதுகாக்க உரிய உத்தரவைப் பிறப்பிக்க கோரி சுற்றுச்சூழல் ஆர்வலர் எம்.கே.ரஞ்சித்சின் கடந்த 2019-ஆம் ஆண்டு தாக்கல் செய்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் இந்தக் கருத்தைத் தெரிவித்தது. மேலும், பெருநிறுவனங்களுக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கடமை தொடர்பாக வழிகாட்டுதல்களையும் உச்சநீதிமன்றம் பிறப்பித்தது. உச்சநீதிமன்ற நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, ஏ.எஸ்.சந்துர்கர் ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்த இந்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

ii. காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வன விலங்குகள் உள்ளிட்ட இயற்கை சூழலைப் பாதுகாத்து மேம்படுத்துவதற்கும், உயிரினங்கள் மீது கருணை காட்டுவதற்கும் ஒவ்வொரு குடிமகனுக்குமான அடிப்படைக் கடமையை, அரச மைப்புச் சட்டப் பிரிவு 51ஏ(ஜி) பிரிவு வகுத்துள்ளது. ஒரு சமூகத்தின் அங்கமாகவும், சட்டபூர்வ அமைப்பாகவும் உள்ள பெருநிறுவனங்களுக்கும் இது பொருந்தும்.

iii. நிறுவனச் சட்டம் 2013-இன் பிரிவு 135-இன் கீழ், பெரு நிறுவனங்களுக்கு உள்ள சமூகப் பொறுப்பில் (சிஎஸ்ஆர்), சுற்றுச்சூழல் பாதுகாப்பு பொறுப்பும்

இயல்பாகவே உள்ளடங்கியுள்ளது. சுற்றுச்சூழல் அமைப்பில் பிற உயிரினங்களுக்கு உள்ள சம உரிமையைப் புறக்கணித்துவிட்டு, தங்களை சமூகப் பொறுப்புள்ளவர்களாக நிறுவனங்கள் கூறிக்கொள்ள முடியாது.

iv. அந்த வகையில், நிறுவனங்கள் சமூகப் பொறுப்புக்கான நிதியை ஒதுக்குவது என்பது, அதன் சட்டபூர்வ கடமையின் வெளிப்பாடாகும். அதுபோல, சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நிறுவனங்கள் நிதி ஒதுக்குவது என்பது, வெறும் தன்னார்வ தொண்டு செயல் அல்ல; மாறாக, அந்த நிறுவனம் தனது அரசமைப்புக் கடமையை நிறைவேற்றுவதாகும்.

v. நிறுவனங்களின் இயக்குநர்கள், இந்த நிறுவனத்தின் உறுப்பினர்களின் நலன்களுக்காக மட்டுமன்றி, அதில் பணிபுரியும் ஊழியர்கள், பங்குதாரர்கள், சமூகம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காகவும் செயல்படுவது சட்டபூர்வமாகக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

vi. சுரங்கம், மின் உற்பத்தி உள்ளிட்ட பெருநிறுவனங்களின் நடவடிக்கைகளால் அழிவின் விளிம்பில் உள்ள பறவை இனங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் நிலையில் அந்த உயிரினங்களை மீட்பதற்கான செலவை சம்பந்தப்பட்ட நிறுவனமே ஏற்க வேண்டும் என்பதை, 'மாசுபடுத்துபவரே பணம் செலுத்த வேண்டும்' என்ற தத்துவம் கட்டாயமாக்குகிறது. எனவே, இந்தப் பறவை இனங்கள் மீட்பு நடவடிக்கையை அதன் வாழ்விடங்களிலேயே மேற்கொள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் சமூகப் பொறுப்பு நிதி (சிஎஸ்ஆர் நிதி) செலவிடப்பட வேண்டும். ராஜஸ்தான் மற்றும் குஜராத் மாநிலங்களில் இயங்கிவரும் புதுப்பிக்க இயலாத எரிசக்தி மின் உற்பத்தி நிறுவனங்கள் இதை எப்போதும் நினைவில் கொண்டு செயல்பட வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

7. நாட்டின் அணுசக்தித் துறையில் தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை அனுமதிக்க வழிவகை செய்யும் 'சாந்தி' சட்ட மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

i. நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட இந்த மசோதாவுக்கு, குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்ததாக மத்திய அரசின் அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ii. அணுசக்தித் துறை தொடர்பாக நடை முறையில் இருந்த 1962-ஆம் ஆண்டு அணுசக்தி சட்டம், 2010-ஆம் ஆண்டு அணுசக்தி இழப்பீட்டுச் சட்டம் ஆகிய பழைய சட்டங்களை இந்தப் புதிய சட்டம் ரத்து செய்கிறது. அணுசக்தி தொடர்பான அனைத்து விதிமுறைகளும் இப்போது விதிமுறை இந்த ஒரே சட்டத்தின்கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

iii. இதுவரை மத்திய அரசின் முழுக் கட்டுப்பாட்டில் மட்டுமே இருந்த அணுசக்தித் துறையில், இனி தனியார் நிறுவனங்களின் முதலீடுகளுக்கும் தொழில்நுட்பப் பங்களிப்புக்கும் அனுமதி அளிக்கப்பட உள்ளது.

iv. இதன்படி, மத்திய அரசிடம் முறையான உரிமம் பெற்று, தனியார் நிறுவனங்கள் அல்லது அரசுடன் இணைந்த கூட்டு நிறுவனங்கள் அணுமின் நிலையங்களை அமைத்து இயக்க மற்றும் பராமரிக்க முடியும். இதனால், நாட்டின் அணுமின்

உற்பத்தித் திறன் பலமடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

v. அதேநேரம், நாட்டின் பாதுகாப்பு மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த சில பிரிவுகள் தொடர்ந்து மத்திய அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுரேனியம் மற்றும் தோரியம் சுரங்கப் பணிகள், அணு எரிபொருள் செறிவூட்டல் மற்றும் மறுசுழற்சி, உயர்நிலை கதிரியக்யக்கக் கழிவு மேலாண்மை போன்ற முக்கியப் பணிகளில் மத்திய அரசு அல்லது அரசுக்குச் சொந்தமான பொதுத் துறை நிறுவனங்கள் மட்டுமே தொடர்ந்து ஈடுபட முடியும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

8. அஸ்ஸாம் மாநிலம், ஹோஜாய் மாவட்டத்தில் கடந்த பிசனிக்கிழமை (டிச.20) அதிகாலை ரயில் தண்டவாளத்தில் நின்றிருந்த யானைக் கூட்டம் மீது ராஜ்தானி விரைவு ரயில் மோதியதில் 8 யானைகள் உயிரிழந்த சம்பவம் வன ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. மிஸோரம் மாநிலம் சைரங்கிலிருந்து தில்லி நோக்கிச் சென்று கொண்டிருந்தது இந்த ரயில், கடும் பனிமூட்டம் காரணமாக யானைகள் நின்றிருப்பது தெரியாததால் யானைகள் மீது ரயில் மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது.

i. காடுகளின் அமைப்பு மற்றும் அடர்த்தியில் நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தும் யானைகள், வனப்பகுதியில் மரங்களின் மீளுருவாக்கத்தில் முக்கியப் பங்கு வகித்து, பிற மேய்ச்சல் விலங்குகளின் வாழ்க்கைச் சூழலை எளிதாக்குகின்றன. நிலப்பரப்பில் வாழும் பேரதிசய என யானைகளின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருவது பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. மனிதர்களுடனான மோதலும், வனப் பகுதியைக் கடந்து செல்லும் தண்டவாளங்களில் ரயில்களில் அடிபடுவதும் யானைகளின் உயிரிழப்புக்கு பிரதான காரணங்கள்.

ii. உலகின் காட்டு யானைகளில் 60 சதவீத யானைகள் இந்தியாவில் உள்ளன. 33 யானைகள் காப்பகங்கள், அறிவியல்பூர்வமாக அடையாளம் காணப்பட்ட 150 வழித்தடங்கள் என யானைகளின் பாதுகாப்பில் இந்தியா சிறந்த பங்களிப்பை அளிக்கிறது. வனவிலங்குகள் நடமாட்டத்தின் தீவிரத்தின் அடிப்படையில், 14 மாநிலங்களில் 1,965 கி.மீ. தொலைவு கொண்ட 77 ரயில் பாதைகள் முன்னுரிமை அளிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பிறகும் யானைகள் உயிரிழப்பு தொடர்வதுதான் சோகம்.

iii. தேசிய பாரம்பரிய விலங்கான யானைகள் பாதுகாப்பு விஷயத்தில் தமிழ்நாடு வனத் துறை இந்தியாவுக்கே முன்மாதிரியாகத் திகழ்வது பாராட்டுக்குரியதாகும். கடந்த அக்டோபர் மாதம் தமிழ்நாடு வனத் துறை வெளியிட்ட அறிக்கையின்படி, தமிழ்நாட்டில் கணக்கிடப்பட்ட 3,170 காட்டு யானைகள் உள்ளன. முந்தைய கணக்கெடுப்பில் இருந்த 3,063 என்ற எண்ணிக்கையைவிட 107 யானைகள் அதிகம்.

iv. வளம் குன்றிய காடுகளை மீட்டெடுப்பது, யானைகள் வழித் தடங்களை வலுப்படுத்துவது, மனிதர்கள்-யானை மோதலைத் தடுக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது என மக்களை மையமாகக் கொண்ட முழுமையான அணுகுமுறையைக் கையாண்டதால் இந்த முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் யானைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள இந்த நிலையான

*வளர்ச்சி, அறிவியலை அடிப்படையாகக் கொண்ட வனவிலங்கு மேலாண்மை மற்றும் சமூகப் பங்களிப்பின் காரணமாக விளங்குகிறது என்றும் வனத்துறை தெரிவிக்கிறது.*

v. *யானைகளின் வாழ்விடங்களைப் பாதுகாக்க செயற்கை நுண்ணறிவு, தொலை உணர்வு மற்றும் புவிசார் வரைபடம் போன்ற அதிநவீன தொழில்நுட்பங்கள் இந்தியா முழுவதும் பயன்படுத்தப்படுகின்றன. தமிழகத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் யானை கடந்து செல்லும் 6,000 இடங்கள் கண்காணிக்கப்படுகின்றன. கோவை மதுக்கரை ரயில் வழித்தடத்தில் முன்னர் அடிக்கடி ரயில்களில் சிக்கி யானைகள் உயிரிழந்த சம்பவங்கள் நிகழ்ந்தன. இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒரு யானைகூட உயிரிழக்க வில்லை எனத் தெரிவிக்கிறார் தமிழக வனத்துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாஹு.*

vi. *சோளக்கரை வனப் பகுதியில் 360 டிகிரி வரையும் சுழலும் தெர்மல் கேமராக்கள் உயரமான கோபுரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த கேமராக்கள் ரயில் தண்டவாள பகுதியிலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவு வரை நிறுவப்பட்டுள்ளன. ரயில் வரும் நேரங்களில் யானைகள் தண்டவாளத்தை நெருங்குவது கட்டுப்பாட்டு அறை மூலம் தெரியவந்தால், அதற்கு முன்னரே அவை வனத்துறை பணியாளர்களால் திசைதிருப்பி விடப்படும்.*

vii. *இந்த வகையில் கடந்த 2024 பிப்ரவரி முதல் 2025 மே மாதம் வரை மதுக்கரை ரயில் வழித்தடத்தை 5,260 யானைகள் பாதுகாப்பாக கடந்துள்ளன. கடந்த ஆறு மாதங்களில் மட்டும் 750 யானைகள் கடந்துள்ளன. இவற்றில் பெரும்பாலான யானைகள் ரயில் வரும் நேரத்தில் அவை தண்டவாளத்தை நெருங்கும் முன்னரே வனத்துறை பணியாளர்களால் திசைதிருப்பிவிடப்பட்டன. யானைகள் மட்டுமன்றி, சிறுத்தைகள், புள்ளிமான்கள், காட்டெருமைகள் உள்ளிட்டவையும் ரயில் தண்டவாளத்தை பாதுகாப்பாக கடக்க இந்த செயற்கை நுண்ணறிவு கேமராக்கள் துணைபுரிந்துள்ளன.*